மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண்.49 /2021

பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் பி.வா.சா.1.

---

பெயர். – திரு.வரதராஜபெருமாள்.

த/பெ. – திரு.சண்முகவேல்

கிராமம் – குமரெட்டியாபுரம்

தொழில் – கூலி வேலை

தாலுகா – கயத்தார்

வயது – 43.

1872–ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19–ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை.–

1) நான் இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | காளியம்மாள் பெயரிலான மானாவாரி தோராய பட்டா பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதிகள் தரப்பில் கலர் ஜெராக்ஸ் என சாட்சிய சட்டத்தின் படி ஏற்றுக்கொள்ளக்கூடாதென ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). |
| 2 | காளியம்மாள் பெயரிலான நத்தம் நிலவரித்திட்ட துாய அடங்கல் உண்மை நகல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3 | தபசில் சொத்திற்க்கான வில்லங்க சான்றிதழ் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4 | காளியம்மாள் பெயரிலான நத்தம் நிலவதித்திட்ட துாய சிட்டா அசல் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | 11.12.2000ம் தேதியில் சண்முகவேல் பெயருக்கு காளியம்மாள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் அசல் 7 தாள்கள் பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6 | 22.02.2021ம் தேதியில் முத்துராஜ் பெயருக்கு சண்முகத்தாய், கருப்பசாமி, வரதராஜ் பெருமாள், முத்துக்கனி ஆகியோர்கள் எழுதிக்கொடுத்த பாகவிடுதலை ஆவணம் அசல் (ஆவணம் 20 பக்கங்கள் கொண்டது ஆவணத்திலி 18 பக்கங்கள் மட்டுமே உள்ளது )பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 7 | முத்துராஜ் பெயரிலான நத்தம் பட்டா எண்.444 இணையதள பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் பி.வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறுதேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
19.02.2026.